# ஏப்ரல் - 23 - செவ்வாய்

**தூய ஜார்ஜ்**

**“என் தந்தையும் உங்கள் தந்தையும் என் கடவுளும் உங்கள் கடவுளுமானவரிடம் செல்லவிருக்கிறேன்”**
**யோவா20:17**

## முதல் வாசகம் : திருத்தூதர் பணி 2: 36 – 41

பெந்தகோஸ்தே நாளில் பேதுரு யூதர்களைப் பார்த்துக் கூறியது : ஆகையால் நீங்கள் சிலுவையில் அறைந்த இந்த இயேசுவைக் கடவுள் ஆண்டவரும் மெசியாவுமாக்கினார் என்பதை இஸ்ரயேல் மக்களாகிய நீங்கள் அனைவரும் உறுதியாக அறிந்து கொள்ளுங்கள்.” அவர்கள் இதைக்கேட்டு உள்ளம் குத்தப்பட்ட வர்களாய் பேதுருவையும் மற்ற திருத்தூதர்களையும் பார்த்து, ”சகோதரரே, நாங்கள் என்ன செய்ய வேண்டும்?” என்று கேட்டார்கள். அதற்குப் பேதுரு, அவர்களிடம், ”நீங்கள் மனம் மாறுங்கள். உங்கள் பாவங்களிலிருந்து மன்னிப்புப் பெறுவதற்காக ஒவ்வொருவரும் இயேசு கிறிஸ்துவின் பெயரால் திருமுழுக்குப் பெறுங்கள். அப்பொழுது தூய ஆவியைக் கொடையாகப் பெறுவீர்கள். ஏனென்றால் இந்த வாக்குறுதியானது உங்களுக்கும் உங்களது பிள்ளைகளுக்கும் தொலையிலுள்ள யாவருக்கும் ஆண்டவராகிய கடவுள் தம்மிடம் அழைக்கும் அனைவருக்கும் உரியது” என்றார். மேலும் அவர் வேறுபல சான்றுகளை எடுத்துக்கூறி, ”நெறிக்கெட்ட இந்தத் தலைமுறையிலிருந்து, உங்களைக் காப்பாற்றிக் கொள்ளுங்கள்” என்று அறிவுறுத்தினார். அவருடைய வார்த்தை களை ஏற்றுக்கொண்டவர்கள் திருமுழுக்குப்பெற்றார்கள். அன்று ஏறக்குறைய மூவாயிரம் பேர் அவர்களோடு சேர்க்கப்பட்டனர்.

**பதில்பாடல் :** ஆண்டவரது பேரன்பால் பூவுலகு நிறைந்துள்ளது.

## நற்செய்தி : யோவான் 20 : 11 - 18

அக்காலத்தில், மரியா கல்லறைக்கு வெளியே நின்று அழுது கொண்டிருந்தார் அழுது கொண்டே கல்லறைக்குள் குனிந்து பார்த்தார். அங்கே வெண்ணாடை அணிந்த இருவானதூதரை அவர் கண்டார். இயேசுவின் உடலை வைத்திருந்த இடத்தில் ஒருவர் தலைமாட்டிலும் மற்றவர் கால்மாட்டிலுமாக அவர்கள் அமர்ந்திருந் தார்கள். அவர்கள் மரியாவிடம், ”அம்மா, ஏன் அழுகிறீர்?” என்று கேட்டார்கள். அவர் அவர்களிடம், ”என் ஆண்டவரை எடுத்துக் கொண்டு போய்விட்டனர் அவரை எங்கே வைத்தனரோ எனக்குக் தெரியவில்லை” என்றார். இப்படிச் சொல்லிவிட்டு அவர் திரும்பிப் பார்த்தபோது இயேசு நிற்பதைக் கண்டார். ஆனால் அங்க நிற்பவர் இயேசு என்று அவர் அறிந்து கொள்ளவில்லை.இயேசு அவரிடம், ”ஏனம்மா அழுகிறாய்? யாரைத் தேடுகிறாய்?” என்று கேட்டார். மரியா அவரைத் தோட்டக்காரர் என்று நினைத்து அவரிடம், ”ஐயா, நீர் அவரைத் தூக்கிக் கொண்டு போயிருந்தால் எங்கே வைத்தீர் எனச் சொல்லும். நான் அவரை எடுத்துச் செல்வேன்” என்றார். இயேசு அவரிடம், ”மரியா” என்றார். மரியா திரும்பிப் பார்த்து, ”ரபூனி” என்றார். இந்த எபிரேயச் சொல்லுக்கு ”போதகரே” என்பது பொருள். இயேசு அவரிடம், ”என்னை இப்படிப் பற்றிக் கொள்ளாதே. நான் என் தந்தையிடம் இன்னும் செல்லவில்லை. நீ என் சகோதரர்களிடம் சென்று அவர்களிடம், ”என் தந்தையும் உங்கள் தந்தையும் என் கடவுளுமானவரிடம் செல்லவிருக்கிறேன்” எனச் சொல்” என்றார். மகதலா மரியா சீடரிடம் சென்று, ”நான் ஆண்டவரைக் கண்டேன்” என்றார் தம்மிடம் இயேசு கூறியவற்றையும் அவர்களிடம் சொன்னார்.

**தியானம்:** இன்றைய இறைவார்த்தைகள் நமக்கு இரண்டு விதமான இறையனுபவங்களைத் தந்து நிற்கின்றன. இறைமகன் இயேசுவோடு நெருங்கிப் பழகக்கூடிய வாய்ப்பும், அவர் வார்த்தைகளை அருகிருந்து அடிக்கடி கேட்கும் சந்தர்ப்பங்களும் அவரது சீடர்களில் பலருக்குக் கிடைத்திருந்தன. மனுமகன் பாடுகள்பட்டு இறக்கவேண்டும் என்பதும், மூன்றாம் நாள் உயிருடன் எழுப்பப்படவும் வேண்டும் என்பதை தம் சீடர்களக்குப பல தடவைகள் இறைமகன் இயேசு இயம்பியிருந்த பொழுதிலும்கூட ‘உயிர்ப்பின் அனுபவத்தை’ அவர்கள் பெற இயேசு அவர்களின் கண்களைத் திறக்க வேண்டியிருந்தது. கல்லறைக்குச் சென்ற மரியாவும், உயிர்த்த இயேசுவை நேருக்கு நேராக சந்தித்த சீடர்களும்கூட ‘உயிர்ப்பின் அனுபவத்தைப் பெற இயேசு அவர்களது ஞானக் கண்களைத் திறக்க வேண்டியிருந்தது. எனவே, நாமும் அந்த உயிரப்பின் அனுபவத்தைப் பெறவேண்டுமாயின் கடவுளின் அருள் நமக்குத் தேவைஎன்பதை நாம் அறிந்துகொள்கின்றோம். இரண்டாவது அனுபவம் ‘பெந்தக்கோஸ்தே அனுபவம்’. அதாவது, யார் யாரெல்லாம் கடவுளின் அனுக்கிரகத்தால் ‘உயிர்ப்பின் அனுபவத்தைப் பெற்றுக் கொள்கின்றார்களோ, அவர்களுக்கு தூய ஆவியார் அருளும் ‘பெந்தக்கோஸ்தே அனுபவமும்’ அருளப்படுகின்றது. ‘பெந்தக்கோஸ்தே அனுபவம்’ என்பது ஒரு ‘திடப்படுத்தல் அனுபவம்’. அதாவது நாம் பெற்றுக்கொண்ட ‘உயிர்ப்பின் அனுபவத்தை’ பிறருக்கு அறிவிக்க தூய ஆவியார் இவ்வனுபவத்தின்மூலம் நம்மைத் திடப்படுத்துகின்றார். அன்று இவ்விரு அனுபவங்களையும் பெற்ற அப்போஸ்தலர்கள் துணிவுபெற்று, இன்று மாபெரும் விருட்சமாக வளர்ந்து நிற்கும் திருச்சபையை நிர்மாணிக்க அடிக்கல் நாட்டினர் அல்லவா? இவ்விரு ‘இறையனுபவங்களையும்’ நாமும் பெற்று இறையரசை இம்மண்ணில் நிலைநாட்ட தேவையான இறையருளையும், வரங்களையும் இறைவனிடம் இறைஞ்சிக் கேட்போமாக!